


# தேவதாசிமரபும் பெண் அடிமைத்தனமும்

## பொன் குலேந்திரன்

### தேவதாசிகளும் கோயிலும்.

“தாசி” என்ற வார்த்தைக்கு அர்த்தம் விபசாரி; எனப் பலர் கருதுவதுண்டு. ஆனால் தாசி என்பது அர்ப்பணிப்பைக் குறிக்கும். தேவன் (இறைவன்) ◌ூ தாசி (அhப்;;;;பணிப்பு) ஸ்ரீ தேவதாசி என்ற சொல் இறைவனின் சேவைக்கு தன்னை அர்ப்;பணித்த பெண்ணைக் குறிக்கும். தென்னிந்தியாவில் , பெரும்பாலும் ஆந்திரம் , கர்நாடகம் பிரதேசங்களில் தேவதாசிகள் என்ற மரபுமுறை சட்டப்படி நீக்கப்பட்டாலும் இன்றும் இருந்து வருகிறது. அவர்கள் கோயில்களில் நடனம் , இசை , போன்ற மரபுவழித் தொழில் செய்பவர்கள். அவர்கள் இறைவனுக்குத் தம்மை அர்பணித்தபடியால் எந்த ஒழுக்கமுள்ள ஆண்மகனையும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

தேவதாசிகள் கோயிலை வாசஸ்தலமாக கருதிவந்தனர். இவர்களில் பலர் ஆடற் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள். பரம்பரை பரம்பரையாக பல குடும்பப்பெண்கள் தேவதாசி தொழிலைச் செய்து வருகிறார்கள். தேவதாசி தொழிலைச் செய்யும் குடும்பத்தில் ஒரு பெண்பிறந்தால் அவளை ருதுவாகமுன்னரே கோயிலுக்கு அர்பணித்துவிடுவார்கள். பின் இப்பெண்குழந்தை கோயில் தர்மகர்த்தாக்களினதும் மற்றும் கிராமத்துச் செல்வந்தர்களின் இச்சைகளைக் பூர்த்தி செய்யும் கருவியாகக் பாவிக்கப்படுகிறாள்.

இந்த மரபு இந்தியாவில் பல பகுதிகளில் பல பெயர்களில் இருந்து வருகிறது. கேரளாவில் மகரிஸ் , ஆசாமில் நதீஸ் , ம:hராஷ்டிராவில் முரளிஸஇ; ஆந்திராவில் போகம் , கர்நாடகத்தில் nஜhகதீஸ் அல்லது பஸ்ஸாவி , தமிழ்நாட்டில் தேவரடியார் என்ற பெயர்களில் இயங்குகின்றனர். கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் தேவதாசிகள் ம,:hராஷ்டிரத்தில் - கர்நாடக பிரதேச எல்லையில் உள்ள கிராமங்களில் வாழ்கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலோர் “யெல்லம்மா” என்ற பெண்தெய்வத்தை குலதெய்வமாகக் கொண்டுள்ளனர். இவர்களுடைய வாழ்;க்கையை வைத்து எழுத்தாளர்கள் பல கதைகளையும், சினிமாக்காரர்கள் பல படங்களையும் எடுத்து பணம் சம்பாதித்துள்ளார்கள். இந்தக் கொடுமையான மதத்துடன் இணைந்த பிற்போக்கான மரபை ஒழித்து தேவதாசிகளுக்கு விடிவுகாலம் ஏற்பட சமுதாய முன்னேற்றத்தில் ஈடுபட்ட பல இயக்கங்கள் முன்வந்துள்ளது பாராட்டுக்குரியது.

**தேவதாசிகளில்; பல பிரிவுகள்**

தேர்ஸ்டன் என்பவர் வாதியும் பழங்குடிமக்களும் என்ற புத்தகத்தில் தேவதாசிகளை பின் வரும் ஏழு பிரிவுகளாக பிரித்துள்ளார்.

- தத்தா - தன்னை கோயிலுககு; அர்பணித்தவள்.
- விக்ரித்தா - தன்னை கோயிலுக்கு பணத்துக்காக விற்றவள்.
- ப்ரித்தியா - தன் குடும்பத்தின் வளத்திற்காக தன்னை தேவதாசியாக மாற்றியவள்.
- ப்ரித்தா - மயக்கி நிர்பந்தமாக கோயிலுக்கு அர்பணிக்கப்பட்டவள்.
- பக்தா - பக்தியின் நிமித்தம் கோயிலில் சேர்ந்தவள்.
- அலங்காரி - நடனத்தில தேர்ச்சி பெற்று அலங்காரம் செய்யப்பட்டு அரசானாலோ அல்லது தனவந்தர்களாலோ கோயிலுக்குத் தானம் செய்யப்பட்டவர்கள்.
- கோபிகா - கோயிலால் நடனத்துதக்கு அல்லது பாடுவதற்காக வேலைக்கு அமர்த்தப்பட்டவள்.

**யெல்லம்மா என்ற பெண்தெய்வம்**.

பிராமணர் ஒருவரின் மகள் ரேணுகா. இவள் ஜமாதகனி என்ற ரிஷியை மணம் முடித்தாள். ஐந்து ஆண்குழந்தைகளுக்குத் தாயானாள். ஒரு நாள் குளத்துக்குத் தண்ணிர்; கொண்டுவரச் சென்றவள் சில வாலிபர்கள் குளத்தில் விளையாடுவதை பார்த்து இரசித்திருந்து விட்டுத் தாமதமாக வீடு திரும்பினாள். அதனால் அவளின் கற்பின் மேல் சந்தேகம் கொண்ட ரிஷி தன் மகன்மாரிடம் ஒவ்வொருத்தராக அவளை தண்டிக்கும் படி வேண்டினார்.

அவர்கள் நான்கு மகன்மார்களும் அவர் இட்ட கட்டளையை நிறவேற்ற மறுத்ததற்காகஇ அவர்களை அலிகளாகும் படி சாபமிட்டார். அவர்களில் ஐந்தாவது மகன் பரசுராமனை அவளின் தலையைக் கொய்யும் படி வேண்டினார்.. அவளின் தலை கொய்யப்பட்டபோது நூற்றுக்கணக்கான தலைகள் தோன்றி பல இடங்களுக்குப் பரவின. இந்த அதிசயத்தினால் அவளின் அலிகளான மகன்மாரும் மற்றும் பக்தர்களும் யெல்லம்மா என்ற பெயரில் அவளை வழிபடத் தொடங்கியதாக புராணக் கதையொன்றுண்டு. யெல்லம்மாவை வழிபடுபவர்கள் பெரும்பாலும் வறுமையால் வாடுபவர்கள். பகுத்தறிவு குறைந்தவர்கள். பண ;வசதியில்லாத காரணத்தாலும், நோய்கள் காரணத்தாலும் யெல்லம்மாவை வழிபட்டனர் பலர். முதல் முறையாக வழிபடத் தொடங்கும் ஜொகதீஸ் (பெண்) ஜோகதப்பா (ஆண்) ஆகியோர் மூன்று கோயில் குளங்களில் குளித்து பின் தலைமைப் பூசாரியிடம் சென்று யெல்லம்மா என்ற தெய்வத்தை எப்படி திருப்திப்படுத்த முடியும் என்ற அவரின் அறிவுரைகளைக் கேட்பார்கள். வருடத்துக்கு இருமுறை பூரணை ;தினத்தன்று யெல்லம்மா கோயிலுக்குச் சென்று வணங்க வேண்டும் என்பது நியதி. சில சமயங்களில் முழு நிர்வாணமாகவோ அல்லது இலைகளால் உடம்பை மறைத்துக்கொண்டு கோயில் சடங்குகளில் பங்குகொள்வார்கள்.

**ஊர்வசியும் தேவதாசி மரபும்**.

இன்னொரு புராணக்கதையின் படி தேவதாசி ஊர்வசியின் மறு பிறப்பு என்பர். ஊர்வசி என்பவள் தேவர் உலகத்தை சேர்ந்த நடன அழகி. ஒரு நாள் இந்திரனின் சபையில் நடனமாடிக்கொண்டிருக்கும் போது இந்திரனின் மகன் ஜெயந்தாவின் அழகில் சொக்கி சற்று நேரம் தன் நிலையை மறந்தாள்.

நடனத்தில் அடி தவறியது. இதைகண்ட அகஸ்திய முனிவர் கோபம் கொண்டு அவளை பூமியில் நடனமாதுவாக போய் பிறக்கும் படி சபித்தார். அதனால் அவள் தேவதாசியாகப் பிறந்தாள் என்பது கற்பனை கலந்த புராணக்கதை. இந்திரனும் அவர் மகனும் பூமியில் போய் பிறக்கும்படி முனிவரால் சாபம் கொடுக்கப்பட்டார்கள் என்கிறது கதை.

**யாழ்ப்பாணத்துச் சின்ன மேளம்**.

யாழ்ப்பாணத்தில் பல வருடங்களுக்கு முன்பு சின்னமேளம் என அழைக்கப்படும் கோயில் திருவிழாக்களில் நடனமாடும் பெண்கள் இருந்தார்கள். இவர்கள் தென்னிந்தியாவில் உள்ள தேவதாசிகளைப் போல் கோயில் சேவைக்கு அர்பணிக்கப்பட்டவர்கள் அல்ல. நடனமாட அவ்வளவுக்கு தேர்ச்சிபெறாத சின்ன மேளக்காரிகளை கோயில் திருவிழாக்களில் நடனமாட வைத்து பணம் சம்பாதித்த பல குழுக்களிருந்தன. பெரும்பாலும் திருவிழா இரவு இரவாக நடந்து பெரியமேளம் என்றழைக்கப்படும் நாதஸ்வரக் கச்சேரிக்குப் பின் சனங்களை கவருவதற்காக அதிகாலையில் நடைபெறும். முகத்தில் அரிதாரம் பூசி மினுங்கும் உடைகளுடனும் கிலிட்டு நகைகளுடனும் வந்து அந்தக்காலத்தில் பிரபல்யமான சந்திரலேகா போன்ற சினிமா படங்களின் இசைக்குஇ தூசி எழும்ப ஆடுவார்கள். இத்தகைய நடனத்தை இப்போது “ரெக்கோர்ட் டான்ஸ்” என்பர். அதில் மயங்கிய பல இளைஞர்கள் சின்னமேளக்காரிகள் வீட்டை வலம்வந்தனர் . காலப்போக்கில் இந்த முறை முற்றாக நீக்கப்பட்டுவிட்டது.

**தமிழ் நாட்டில் சின்ன வீடு.**

“ சின்ன வீடு” என்ற வார்த்தை தமிழ்நாட்டில் பிரபல்யமான வார்த்தை. சினிமா , சிறுகதை , டி.வி தொடர்நாடகங்களுக்கு சின்ன வீடு ஒரு ;சுவாரஸ்யமான விசயம். “என் புருஷன் எனக்கு மட்டும் தான்” என்ற சொற் தொடரில் சின்ன வீடு கலக்கிறது. ஓமம் வளர்த்து முறைப்படி திருமணம் செய்த ஆண்கள் பலர், மனைவியிருக்கும் போது தேனீயைப் போல் பல பெண்களை நாடிச் செல்வர். சிலசமயம் தேகநலம் குன்றிய மனைவி தன் கணவனுடன் தாம்பத்திய உறவு வைக்க முடியாத நிலையில் வேறு ஒரு பெண்ணுடன் கணவன் தொடர்;பு வைப்பதை அவ்வளவுக்கு எதிர்ப்பதில்லை. அரசியல்வாதிகளில் பலர் சின்னவீடு வைப்பதை ஒரு அந்தஸ்தாகவும் பொழுதுபோக்காகவும் கருதுகிறார்கள். பணம் உள்ளவர்கள் தான் இரண்டோ அல்லது மூன்றோ குடும்பங்களுக்கு தலைவனாக இருக்க வசதியுள்ளவார்கள். ஒரு ஆண் பல பெண்களுடன் கூடிவாழ்வதை தமிழ் சமுதாயம் அவ்வளவுக்கு பெரிதுபடுத்துவதில்லை. இங்கு கற்புஎன்ற சொல்லுக்கு அவ்வளவுக்கு இடமில்லை. ஆனால் பெண்ணைப் பொறுத்தமட்டில் கைபிடித்த ஒருவனுடன் தான் தாம்பத்திய உறவு வைக்க கடமைப்பட்டுள்ளனர். கணவன் நோயாளியாகவோ அல்லது சந்ததியை விருத்தி செய்யமுடியாத ஆண்மையற்றவனாக இருந்தாலும் கூட பெண் ஒழுக்கம் தவறக்கூடாது என்கிறது சமுதாயம்.

**கிராமத்தில் அறியாமை**

தென்நாட்டில் பல கிராமங்களில் பல ருதுவாகாத தேவதாசிகள் சிறுவயதிலேயே தனவந்தவர்களால் கற்பழிக்கப்பட்டு பின்னர் விபசாரிகளாக

வாழ்கிறார்கள். கோயில் திருவிழாவில் முதல் முறையாக இறைவனின் சேவைக்கு அர்ப்பணிக்கப் பட்ட ஒரு பெண் நடமாடும் போது அங்கு குழுமியிருககும் பல பணம்படைத்த காமுகர்களின் பார்வைக்கு இலக்காகிறாள். தன்னை ஈன்றெடுத்ததும் ஒரு பெண்இ தான் ; பெண்களுக்குத் தந்தையாகஇருப்பதையும் சிந்திக்காமல் சில குடும்பஸ்தர்கள் தன்னிலை மறந்து நடனமாடும் பெண்களின் மேல் குறிவைக்கிறார்கள். தில்லானா மோகனாம்பாள் என்ற படத்தில் இந்த சூழ்நிலையை ஒரு காட்சியாக அமைத்து குடும்பத்தலைவன் செய்யவிருக்கும் தவறை உணரவைக்கிறார்கள். கோயிலில் நடனமாடும் தேவதாசிகளை கூட்டிக்கொடுத்து பணம் சம்பாதிக்கும் தரகர் கூட்டம் வேறு. இந்த ஒழுக்கமற்ற நடத்தையால் எயிட்ஸ் போன்ற பயங்கரவியாதியும் மற்றும் தொற்றுநோய்களும் பரவ ஏதுவாகிறது. ஒன்றுமறியாத சிறு பெண்குழந்தைகள் ஆண்களின் காம இச்சைக்குப் பலியாகி பின் சிவப்பு விளக்கு என்ற விபச்சாரம் நடக்கும் பகுதியில் தஞ்சமடைகிறார்கள். தேவதாசிகளுக்குத் திருமணம் என்பது கிடையாது. இவர்களை கர்நாடகம் பிரதேசத்தில் யோகினி என அழைப்பர். இவர்கள் பெரும்பாலும் செப்பு வளையல்களையும், கழுத்தில் தோலால் செய்யப்பட்ட பதக்கத்தையும் கட்டித்தொங்கவிடுவர். யெல்லம்மா என்ற பலம் வாய்ந்த பெண்தெய்வம் அவர்களின் குலதெய்வமாகும். அத்தெய்வத்தின் படம் பதித்த பதக்கங்களை கொண்ட அட்டியலை பெரும்பாலும் இவர்கள் அணிந்திருப்பர்.

**தேவதாசிகளுக்கிடையே ஒரு புரட்;சி**

1999ம் ஆண்டு  ஆந்திராவில் உள்ள தேவதாசிகளுக்கு ஒரு மைல்கல்நட்ட ஆண்டு. பொச்சம்மா என்ற தெய்வத்திற்கு அர்பணிக்கப்பட்ட போஜம்மா என்ற ஜோகினி (தேவதாசி) நூறு ஆண்டுகுளுக்கு மேல்பட்ட வழக்கத்தில்  இருந்து மாறுபட்டு அஞ்ஜய்யா என்ற இளைஞனை திருமணம்புரிந்தாள். ஆந்திராவின் கவர்னர் டாக்டர் ரங்கராஜனும் அவரின் மனைவியும் திருமணத்துக்கு சாட்சிகளாக இருந்து முன்னின்று நடத்தினார்கள். சமுதாய சீர்திருத்தத்தில் ஈடுபட்டுள்ள "சம்ஸ்கார்" என்ற இயக்கம் அத்திருமணத்திற்கு முக்கிய காரணமாகவிருந்தது. வேளாண்மை செய்யும் குடும்பத்தை சேர்ந்த போஜம்மா 15 வயதில் தேவதாசி வாழ்க்கையை ஆரம்பித்தாள். அஞ்ஜய்யா என்ற இளைஞனை பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்தாள். அவளின் திருமணம் அவளைப்போன்ற வேறும் பல தேவதாசிகளையும் ஆந்திர அரசாங்கத்தையும் சிந்திக்க வைத்திருக்கிறது. அரசு "ஜோகினி சட்டத்தில்" மாற்றங்கள் கொண்டு வந்து தேவதாசிகள் திருமணம் செய்ய வழிவகுக்க சம்மதித்துள்ளது. சம்ஸ்கார் இயக்கத்தின் சமூக சீர்தீருத்த பணிக்கு உதவுவதாகவும் உத்திரவாதம் அளித்துள்ளது. இவ்வியக்கம் ஜோகினிகளுக்கு சீர்திருத்த பள்ளியொன்று நடத்திவருகிறது.

அசம்மா என்ற ஆந்திரப்பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடைய  தேவதாசி தன் கிராமத்திலிருந்து தப்பி ஓடி, தேவதாசி வழக்கத்திற்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினாள். சட்டமிருந்தும் போலிஸ் அதை நடைமுறைப்படுத்தவில்லை. காரணம் கிராமத்து தனவந்தர்களின் தலையீடு. " நான் தேவதாசியாக என்னை அர்பணித்த நாள் முதல் நான் மதிப்புள்ளவளாக வாழவில்லை. கர்னி என்ற இடத்தில் வாழ்ந்த ஆடவர்களின் ஆசையை பூர்த்தி செய்ய நான் எந்த நேரமும் தயாராக வாழ்ந்தேன். இவ் வாழ்க்கை நான் ருது வாக முன்பே

ஆரம்பமாகியது.” என்கிறாள் அசம்மா. அவள் ஏழுவயதாயிருக்கும் போதே கடவுளுக்கு அவளை பெற்றோர்கள் அர்ப்பணித்து விட்டார்கள். அவளுடைய தைரியத்துக்கு அரசினால் “நீர்ஜா பனோட்” என்ற விருது வழங்கப்பட்டது

**சாவித்திரியும் பேத்தியும்.**

அரசின் சட்டத்தின் மூலம் தேவதாசி பிரிவுக்கு பெண்களை அர்ப்பணிப்பது தடைசெய்யப்பட்டாலும் இன்னும் அந்த முறை தொடர்ந்து நடந்துவருகிறது. அதற்கு காரணம் தொண்டு தொட்டு இருந்து வந்த மதத்துடன் இணைந்த பழக்கத்தில் இருந்து  மக்களை மாற்றுவது கடினம். கடவுளின் சாபத்துக்கு ஆளாகுவோமோ என்பது ஒரு பயம். இரண்டாவது கிராமத்து மேல் சாதி தனவந்தர்களின் பயமுறுத்தலகள் வேறு. அதற்கு அறியாமை முக்கிய காரணம். வறுமையும் , பயமும் இருக்குமிடத்தில் அறியாமை நிலைத்து நிற்கிறது. கர்நாடகாவில் எழுபத்தைந்து வயதுடைய சாவித்திரி என்ற மூதாட்டி தன் பதினனி;ரெண்டு வயதுடைய பேத்தியை தேவதாசியாக ஒரு சிறுகோயிலுக்கு அப்பணித்தாள். “ அவளுடைய உடம்பு தாக்;குப்பிடிக்குமட்டும் என் பேத்தி தேவதாசியாக இவ்வுலகில் உயிர்வாழ்வாள்” என்கிறாள் அந்த மூதாட்டி. நான் முற்பிறவியில் செய்த  கர்மாவை தேவதாசியாக வாழ்ந்து தீர்த்துவிட்டேன். இனி சந்தோஷமாக இறக்கத் தயார்.” என்றாள் அந்த மூதாட்டி.

இன்று இந்தியாவில் வாழும் விபசாரத் தொழில் புரியும் கிட்டத்தட்ட 10 மில்லியன் விபசாரிகளில் 15 விகிதம் தேவதாசிகள். கர்நாடகாவிலும் ம:hராஷ்ராவிலும் தேவதாசிகள் கூடுதலாக உண்டு. இப்பிரதேசங்களில் பாலியலில் ஈடுபட்ட பெண்களில் 80 விகிதம் தேவதாசிகள். மகாராஷ்டிராவில்

, இரண்டரை மில்லியன் சனத்தொகையுள்ள “பூனே” என்ற நகரத்தில் 50 விகிதத்துக்கு மேல் அங்கு வாழும் தேவதாசிகள் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

**மாதா என்ற தேவதாசி போன்ற முறை**

ஆந்திரப்பிரதேசத்தில் “மாதா” என்ற தேவதாசி போன்ற பழமை வாய்ந்த முறையுண்டு. ஹரிஜன் சாதியைச் சேர்ந்த அழகிய சிறுமி கிராமத்லில் வாழும் நிலச்சுதார்களான தனவந்தர்கள்pன் பார்வைக்கு தென்பட்டால் அவளை மாதாவாக்கித் தம் காம இpச்சைக்கு பலியாக்குவார்கள். கோயில் குளத்தில் அவளைக் குளிப்பாட்டி, அலங்கரித்து பின் வீதிவழியே பவனியாக கூட்டிச் செல்வார்கள். ஏதோ ஆட்டை கோயிலில் பலி கொடுப்பது போல் அவர்கள் செயற்பாடு இருக்கும். பின் தேர்ச்சிபெற்ற வயது வந்த மாதாவிடம் அனுப்பி எப்படி ஆண்களை திருப்திப்படுத்த வேண்டும் என பயிற்ச்சி அளிப்பார்கள். வயது வந்தவுடன் அவளை பகிரங்கமாக ஏலத்தில் விடுவார்கள். கன்னிகழியாத பெண்ணுடன் உடலுறவு வைத்தால் உடம்பில் இருக்கும் தொற்றுநோய்கள் குணமடையும் என்ற மூடநம்பிககைளை அக்கிராமங்களில் பலர் கொண்டிருந்தனர். அதனால் ஏலத்தில் அதிக பணம் கொடுத்து கன்னிகழியாத மாதாவை வாங்குவார்கள். “மாதா” என்ற புனிதமான சொல் தாயைக்குறிக்கும். ஆனால் இச்சொல்லை ஒரு இழிவான செயலுக்கு எதற்காக பாவிக்கிறார்கள் என்பது  புரியாத புதிர்.

**அறியாமையை அழிப்போம்.**

“மாதர்தம்மை இழிவு செய்யும் மடமை யைக் கொளுத்துவோம்” என பாரதியார் பாடினார். எதற்காக பாடினார்?. “நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் “ என கவலைப்படுகிறார். இந்தியாவில் கிராமப்புறத்தில் வாழுபவர்களின் அறியாமைக்கு சவுக்கடி தன் கவித்திறனால் கொடுக்கிறான். பால்ய திருமணம் , உடன்கட்டை ஏறுதல் , சீதனம் , விதைவைகளின் மறுதிருமணத்துக்கு  தடை, மதம் என்ற போர்வையில தேவதாசி மரபு போன்ற பல வடிவங்களில் பெண்களின் சுதந்திரத்தை பாதிக்கும் செயல்களுக்கு அறியாமையே காரணம். பிற மதத்தினர் நகைக்கக் கூடிய மரபுவழி மதச் சடங்குகள் பெரும்பாலும் அறியாமை , பயம் , வறுமை நிமித்தம் நடைபெறுகிறது. ஊடகங்கள் மூலம் இத்தகைய மூடநம்பிகைகயுடனும் முதலாளித்;துவத்துடனும் இணைந்த தீய மரபுகளையும் அதனால் பாதிகப்பட்டவர்களின் சோகமான கதைகளை உலகயறிய செய்ய வேண்டும. சீர்திருத்த வாதிகள் இத்தகைய மூடநம்பிக்கைகளை அழித்து பெண்களின் கற்பை காப்பாற்றி நல்வாழ்வு கொடுக்கும் திட்டங்களுக்கு அரசும், படித்த பொது மக்களும் உதவவேண்டும. இத்தகைய வழக்கங்களால் பாதிக்கப்பட்ட் அசம்மாஇ ஜோகம்மா போன்ற பெண்கள் எப்படி துணிந்து புரட்சியில் ஈடுபட்டார்களோ அதேபோன்று பல தேவதாசிகள் முன்வரவேண்டும். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல திட்டங்களை அரசு செயல்படுத்தவேண்டும்.

****